சுருக்கம்

பாசனம் – நீர்வள ஆதாரத் துறை – 2008–2009 ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டம் – தூத்துக்குடி மாவட்டம், ஆலந்தா கிராமத்தில் ஆலந்தா அணைக்கட்டு அருகே ரூ.20.00 இலட்சம் செலவில் தலைப்பு மதகு மற்றும் பாதுகாப்பு சுவர் அமைக்கும் திட்டம் – நிலை நிதிக் குழுவினால் ஒப்புதல் அளிக்கப்பட்டது – நிர்வாக ஒப்புதல் ஆணை வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணி (ப்பி2) துறை

அரசாணை (நிலை) எண். 138 நாள் 21.5.2008

வைகாசி 8, திருவள்ளுவர் ஆண்டு 2039

படிக்கப்பட்டது:

1. தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்), நீர்வள ஆதாரத் துறை, சென்னை கடிதம் எண்.OT4/AE4/Part II/2008–09/2007, நாள் 11.1.2008
2. தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்), நீர்வள ஆதாரத் துறை, சென்னை கடிதம் எண். எப்2/பகுதி II திட்டங்கள் 2008–2009, நாள் 21.4.2008

------

ஆணை:

நீர்வள ஆதாரத் துறை, தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்) அவர்கள் தூத்துக்குடி மாவட்டம், ஆலந்தா கிராமத்தில் ஆலந்தா அணைக்கட்டு அருகே ரூ.20.00 இலட்சம் செலவில் தலைப்பு மதகு மற்றும் பாதுகாப்பு சுவர் அமைக்கும் திட்டத்திற்கு 2008–2009–ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் நிர்வாக ஒப்புதல் வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேலே 1–ல் படிக்கப்பட்ட கடிதத்தில் நீர்வள ஆதாரத் துறை, தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்) அவர்கள் கடிதத்துடன் பெறப்பட்ட விளக்கக் குறிப்பில், ஆலந்தா கிராமத்தின் தெற்குப் பகுதியில் அமைந்துள்ள ஆலந்தா அணைக்கட்டு, திறந்தவெளி நீர்ப்பிரிகை வாய்க்கால் மூலமாக சம்பக்குளம், பிராக்கன்குளம் மற்றும் உலங்குடி ஏரிகளுக்கு ஆற்று நீரை பிரித்து அனுப்புகிறது என்றும், அணைக்கட்டில் ஆலந்தா வழங்கு வாய்க்காலுக்கு தலைப்பு மதகு இல்லாததால், பருவகாலங்களில் வெள்ள நீர் இந்த வாய்க்காலில் புகுந்து வாய்க்காலின் கரைகளை பாதிக்கிறது என்பதால், ஆலந்தா வழங்கு வாய்க்காலுக்கு புதியதாக தலைப்பு மதகு கட்டுவது, ஆலந்தா வழங்கு வாய்க்காலில் உடைப்பு ஏற்பட்ட மற்றும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பாதுகாப்புச் சுவர் கட்டுவது மற்றும் மூன்று நுழைவாய் பகுதிகளின் அருகில் கரைகளைப் பலப்படுத்துதல் அவசியமாகிறது என்றும், இத்திட்டத்தினால் மொத்தம் 205.23 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும் என்றும், இத்திட்டத்தின் மதிப்பு 2008–2009ம் ஆண்டு விலைவிகிதப்படி ரூ.20.00 இலட்சம் ஆகும் என்றும் மற்றும் இத்திட்டம் நீர்வள ஆதாரத் துறை, மதுரை மண்டல தலைமைப் பொறியாளர் அவர்களால் செய்து முடிக்கப்படும் என்பதால், இத்திட்டத்தினை செயல்படுத்த கூடுதல் பணியாளர்கள் தேவைப்படாது எனவும் தெரிவித்துள்ளார்.

3. மேற்கண்ட திட்டத்தினை 2008–2009–ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் செயல்படுத்துவதற்கு நிலை நிதிக் குழு (Standing Finance Committee) ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி, தூத்துக்குடி மாவட்டம், ஆலந்தா கிராமத்தில் ஆலந்தா அணைக்கட்டு அருகே ரூ.20.00 இலட்சம் (ரூபாய் இருபது இலட்சம் மட்டும்) செலவில் தலைப்பு மதகு மற்றும் பாதுகாப்பு சுவர் அமைக்கும் திட்டத்திற்கு 2008–2009–ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் நிர்வாக ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிடுகிறது. இத்திட்டம் தொடர்பாக, சில்லறை செலவினங்கள் சிறு மேற்பார்வை செலவுகள் மற்றும் எதிர்பாரா செலவுகள் ஆகிய அனைத்து இனத்தின் கீழ் ஏற்படும் மொத்த செலவுகள், மொத்த பணி செலவுத் தொகையில் 2.5% மேல் மிகாமல் இருக்க வேண்டும் என்கிற நிபந்தனையுடன் ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

4. மேலே பத்தி 3ல் ஒப்புதல் அளிக்கப்பட்ட பணிக்கான செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும் :–

"4702 – 00 சிறு பாசனம் குறித்த மூலதனச் செலவு–101. மேற்பரப்பு நீர் – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JA சிறு பாசன சிறப்புத் திட்டம் –16 பெரும் பணிகள் " (து.தொ.கு. 4702–00–101–JA –1607)".

5. தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை, மதுரை மண்டலம் அவர்கள் மேற்கண்ட திட்டப் பணியினை உடனடியாக மேற்கொண்டு குறித்த காலத்திற்குள் செய்து முடிக்கவும் மற்றும் திட்டப்பணியின் முன்னேற்றம் குறித்த அறிக்கையை ஒவ்வொரு மாதமும் அரசுக்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண். 26486/பொ.ப.II/2008 நாள் 12.5.2008ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ்.ஆதிசேஷையா
அரசுச் செயலாளர்

பெறுநர்
முதன்மைத் தலைமைப்பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது),
நீர்வள ஆதாரத்துறை, சேப்பாக்கம், சென்னை.5
தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை, மதுரை மண்டலம், மதுரை 2.
தலைமைப்பொறியாளர்(திட்ட உருவாக்கம்), நீர்வள ஆதாரத்துறை, சேப்பாக்கம், சென்னை.5
மாவட்ட கருவூல அலுவலர், தூத்துக்குடி
மாநில கணக்காயர், சென்னை.18
நகல்
நிதி (பொ.ப. II/(வ.செ. II ) துறை, சென்னை.9
பொதுப்பணித் (சி.பா.1) துறை, சென்னை 9 (5 நகல்கள்).
இ.கோ /உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்